எர்தாம்டனின் சுடர்

புத்தகம் - 1 / அத்தியாயம் - 1

அது ஒரு அதிகாலை நேரம். வெய்யில் காலம் ஆதலால் சூரியன் சீக்கிரமே தனது வேலையைத் தொடங்கிவிட்டான். அந்த எர்தாம்டன் நகரில் உள்ள வீடுகளில் ஜன்னல் மூலமாக நுழைந்து தூங்கிக் கொண்டு இருந்தவர்களை எழுப்பினான். சில வீட்டு ஜன்னல்கள் திறை போட்டு மூடி இருந்தாலும், அதன் நடுவில் உள்ள ஓட்டையின் மூலம் நைசாக தனது கதிர்களை பாய்ச்சினான்.

பாதித் தூக்கத்தில் இருந்த அருண் மேகநாதன், தனது முகத்தில் சடார் என்று சூரிய வெளிச்சம் பட, தனது முகத்தை போர்வையால் மூடிக்கொண்டான்.

“கண்ணா, நேரம் ஆகிருச்சு பாரு. எழுந்திரு.”

அது அருணின் அம்மா, கீதா. ஜன்னல் திறையை திறந்துவிட்டு அவனை செல்லமாக எழுப்பினார்.

“அம்மா ப்ளீஸ், 5 நிமிஷம்?” என்று கெஞ்சினான் அருண்.

இது தினந்தோறும் நடக்கும் செல்லப் பிடிவாதம்.

“மணி ஏழு ஆயிருச்சு பாரு. இனிமேலும் தூங்கினா சோம்பேறி ஆயிருவ.”

“அம்மா, இன்னிக்கும்மா சீக்கிரம் எழுந்துக்கணும்? ஒரு நாள் லேட்டா எழுந்துக்கரேனே?” என்று மீண்டும் கெஞ்சினான். அன்றோ ஒரு ஞாயிற்றுக்கிழமை. பள்ளிக்கூடமோ கிடையாது. அம்மாவிடம் தனது பிடிவாதம் காட்டினான்.

“கண்ணா, இப்ப நாம ஓடப் போகனும். போய் சீக்கிரம் முகம் கழுவி, பல் விலக்கி, வா,” என்று கூறி, கீதா அந்த அறையில் இருந்து வெளியே சென்றார்.

கீதா ஒரு விவசாய விஞ்ஞானி (Agricultural Scientist). அவர் தனது குடும்பத்தில் அனைவரும் ஆரோக்கியமாக இருப்பதில் மிகவும் முக்கியத்துவம் கொடுத்தார். நல்ல சாப்பாடு, நல்ல உடற்பயிற்சி, இவைகளை வலி உறுத்தினார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலையில் அவர்கள் குடும்பத்தோடு ஜாகிங் சென்றனர்.



அம்மா போன பின்னால், அருண் மெத்தையின் மீது உட்கார்ந்தான். முகம் கழுவ போவதிற்கு முன்னே தினமும் காலையில் தனது நாய்க்குட்டி பக்கரூவுடன் ஒரு விளையாட்டு விளையாடுவான் அருண். அவனது செல்ல நாய்க்குட்டி பக்கரூவை அன்று காணவில்லை. காலையில் அருண் எழும் முன்னரே அருணின் அறைக்குள் தினமும் வந்து ஒரு குரை குரைத்து அருணை பக்கரூ எழுப்புவான். ஆனால், அன்றோ பக்கரூவின் நிழல் கூட அங்கு காணவில்லை. அது அருணுக்கு ஒரே ஆச்சிரியமாக இருந்தது.

“எங்கே பக்கரூ?” என்று சொல்லிக்கொண்டே, பல் விலக்க எழுந்து சென்றான்.

சிறிது நேரத்திற்கு பின்பு ஜாகிங் போவதிற்கான உடையை அணிந்து கொண்டு சமையல் அறைப் பக்கம் அருண் வந்தான். அங்கே அவனது அப்பா பேப்பர் படித்துக்கொண்டு இருந்தார்.

“அருண், குட் மார்னிங். நல்லா தூங்கினயப்பா?” என்று கேட்டார்.

அருண் அப்பாவின் கேள்விக்கு பதில் சொல்லாமல் நாற்காலியின் அடியில் எதையோ தேடினான்.

“என்னப்பா, எதை இப்படித் தேடுர?” என்று கேட்டார்.

“அப்பா, பக்கரூ பார்தீங்களா?”

“அவன் தூங்கரானே அருண். இப்பத்தான் பார்த்தேன்.”

“பக்கரூ இன்னும் தூங்கரானா? மாட்டானே!” என்று சொல்லிக் கொண்டே அருண் பதட்டமாக பக்கரூவின் இருப்பிடம் நோக்கி ஓடினான்.

பக்கரூவின் இருப்பிடம், அருணின் அறையில் இருந்து சற்றுத் தள்ளி ஒரு மூலையில் இருந்தது. பக்கரூவின் இடம் ஒரு சின்ன மாளிகை போன்று அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது. அங்கே, ஒரு மெத்தையில் பக்கரூ கண்ணை பாதி மூடியபடி படுத்துக்கொண்டு இருந்தான்.

“பக்கரூ, எழுந்திரு. யார் வந்திருக்காங்க பாரு,” என்று சொல்லி, அருண் அவனை எழுப்ப முயற்ச்சி செய்தான்.

பக்கரூவிடம் இருந்து வெறும் முனகல் மட்டும் கேட்டது. அருண் அவனை படார் என்று தூக்க முயன்றான்.

அப்பொழுது, இரு கைகள் அருணின் தோளை கெட்டியாகப் பிடித்தன. திரும்பிப் பார்த்தான் அருண்: அது அம்மாவின் கைகள்.

“அருண், பக்கரூவை தொந்தரவு செய்யாதே. வா, நாம மட்டும் ஜாகிங் போகலாம்,” என்றார்.

“அம்மா, ப்ளீஸ்...கொஞ்சமாவது அவனை எழுப்பிப் பார்கரேன்,” என்று மல்லாடினான் அருண்.

“வேண்டாம் கண்ணா, நாம திரும்பி வரத்துக்கு முன்னால அவன் எழுந்துருவான். அவன் தூங்கட்டும் அதுவரையில்.”

அன்று அருணின் அப்பா வீட்டிலேயே இருக்க முடிவு செய்தார்.

“அருண், நீ அம்மாவோடு ஜாகிங் போ. நான் பக்கரூவை பாத்துக்கரேன்,” என்றார்.

“சரி அப்பா, பக்கரூ எழுந்தவுடன் எங்களுக்கு டெக்ஸ்ட் பண்ணுங்க, ப்ளீஸ்,” என்று சொன்னான்.

“கட்டாயமா. டெக்ஸ்ட் என்ன, Instagram அனுப்பரேன்,” என்றார். “கவலைப்படாதே, அம்மாவோடு நல்ல ஓடிட்டு வா.”

சாதரணமாக கீதா ஜாகிங் போகும் பொழுது Cell Phone எடுத்து வருவதை விரும்ப மாட்டார். ஆனால், அன்றோ அருணின் மனது புண் படாமல் இருக்க அவர் அனுமதி கொடுத்தார்.

அரை மனதோடு அருண் அம்மாவுடன் வெளியே ஜாகிங் சென்றான்.

--- முடிவு ---